**Sessions Case No. 7/2019**
**P.W.10 - மணிமேகலை**
**11.08.2022**

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை விசாரணை செய்யப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பு)**

புகாரில் எதிரியுடைய பெயர், முகவரி தெரிவிக்கப்படவில்லை. அ.சா.ஆ11 ல் 7வது காலத்தில் எதிரி யார் என்று தெரியவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 12.02.2018 அன்று மாலை 05.15 மணிக்கு தான் நீதித்துறை நடுவர் 2க்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பப்பட்டு, பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மிகவும் கால தாமதமாக பெறப்பட்டது அன்றைய தினம் 04.30 மணி வாக்கில் தான் பெறப்பட்டது என்றால் சரியல்ல. எங்கள் காவல் நிலையத்தில் கணிணியில் தட்டச்சு செய்ய பெண் காவலர்கள் உள்ளனர், அவர்கள் தான் அ.சா.ஆ.11 முதல் தகவல் அறிக்கையை தட்டச்சு செய்துள்ளார்கள். 12.02.2018ம் தேதி பகல் முழு நேரமும் புகார்தாரர் கிராம நிர்வாக அலுவலர் எங்கள் காவல் நிலையத்தில்தான் இருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் அவர்கள் புகாரையும், மற்றும் சில ஆவணங்கயையும் அ.சா.1 கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தவறான சங்கதிகள், ஆவணங்கள் அடிப்படையில் தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக்கொள்கிறார்.

**மறுவிசாரணை**

இல்லை.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, NAGAPATTINAM.**
**Sessions Case No. 7/2019**

Deposition of Witness for Prosecution : P.W. 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | ஸ்ரீகாந்த் | **தகப்பனார் பெயர்** | : | விஜயகுமார் |
| **ஊர்** | : | விழிதியூர் | **தாலுக்கா** | : | காரைக்கால் |
| **ஜாதி** | : | -- | **வயது** | : | 25 |
| **மதம்** | : | -- | தொழில் | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 11.08.2022.

**முதல் விசாரணை**

நான் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள விழிதியூரில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலைக்கு முன்பாக, விழிதியூர் புவனேஸ்வரி பெட்ரோல் பங்கில் கேஷியராக வேலை பார்த்து வந்தேன். 11.02.2018ம் தேதி இரவு 09.30 மணிமுதல் 10.00 மணிக்குள் மகேந்திரன் மற்றும் ஹரிஹரன் ஆகியோர் வந்து டீசல் வாங்கி சென்றனர். ஹரி என்று கூப்பிடுவோம். ஹரியை பார்த்தால் அடையாளம் எனக்கு தெரியும். மகேந்திரனையும் பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். அவர்கள் ரூ.300/- க்கு டீசல் வாங்கினார்கள். இவர்கள் இருவரும் அடிக்கடி பங்கிற்கு வந்து டீசல் மற்றும் பெட்ரோல் வாங்க வருவார்கள், அதனால் எனக்கு தெரியும். என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை (2ம் எதிரி தரப்பில்)**

இவர்கள் இருவரும் அடிக்கடி பங்கிற்கு வந்து டீசல் மற்றும் பெட்ரோல் வாங்க வருவார்கள், அதனால் எனக்கு தெரியும் என்று நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. அன்றைய தினம் டீசல், பெட்ரோல் வாங்கிய அனைவரையும் என்னால் சொல்ல முடியாது. நான் தற்சமயம் அந்த பங்கில் வேலை செய்யவில்லை. நான்

சொல்லும் தேதியிலும் பங்கில் நான் வேலை செய்யவில்லை என்றாலும், போலீஸ் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. பெட்ரோல் பங்கில் ஒரு மேலாளரும், ஒரு காசாளரும் உண்டு என்றால் சரிதான். அன்று டீசல் வாங்கியதற்கு நாங்கள் ரசீது ஏதும் கொடுக்கவில்லை. அன்றைய தினம் மகேந்திரனும், ஹரிஹரனும் ஒன்றாக வரவில்லை என்றும், அவர்கள் டீசல் வாங்கவில்லை என்றும், அவ்வாறு வாங்கியிருந்தால் ரசீது கொடுத்திருப்போம் என்றும், ரசீது கொடுக்காததால் அவர்கள் வரவில்லை என்பது ஊர்ஜிதம் ஆகிறது என்றால் சரியல்ல. அவர்கள் எந்த இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் போலீஸ் சொல்லி கொடுத்ததன் படி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (1ம் எதிரி தரப்பில்)**

2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 1ம் எதிரி தரப்பில் தனதாக ஏற்றுக்கொள்கிறார்.

**மறுவிசாரணை**

**இல்லை.**